**செய்தி வெளியீடு எண்.438** **நாள்.1.8.2009**

மக்கள் நல்வாழ்வுத் துறை

# செய்தி வெளியீடு

**கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வைராலஜி துறை**

**எம். எஸ்.சி. (மாலிகுலார் அண்டு டயாக்னாஸ்டிக் வைராலஜி)**
**என்ற முதுகலைப்பட்ட புதிய பாடப்பிரிவை இந்த ஆண்டில் தொடங்க உள்ளது.**

**இதற்கான கல்வி தகுதி**

விண்ணப்பதாரர் மைக்ரோபயாலஜி அல்லது பையோடெக்னாலஜி இளம் அறிவியல் பாடப்பிரிவில் ஏதேனும் ஒன்றில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு மதிப்பெண்களை பெற்றிருக்க வேண்டும்.

படிப்புக் காலம்: 2 ஆண்டுகள் ஆகும்.

**பாடத்திட்ட விளக்கம்**

- இரண்டு வருட முதுகலை வைராலஜி பட்டப்படிப்பு
- சர்வதேச தரம் வாய்ந்த பாடத்திட்ட முறை
- தொலைநோக்கு தொழில்துறை அம்சங்களை கொண்டது
- தரமான இரண்டு வருட ஆய்வுக்கூட பயிற்சி

**சிறப்பம்சங்கள்**

- சர்வதேச புகழ்வாய்ந்த மருத்துவ பல்கலைக் கழக பேராசிரியர்களால் சிறந்த முறையில் பயிற்சி.
- அனைத்து விதமான ஆய்வுகள் மேற்கொள்வதற்கான பரிசோதனைக் கூட உள்கட்டமைப்பு
- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள வைராலஜி துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- சிறந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதற்கான பாடத்திட்டம்.

**21.07.2009 முதல் விண்ணப்பத்தை கீழ்கண்ட இணையதளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்**
**www.tnhealth.org / www.tn.gov.in**

**விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 10.08.2009**

**நுழைவு தேர்விற்கான தேதி: 22.08.2009**

**வி.கு.சுப்புராஜ்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

*************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.